**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.84** **நாள் : 23.05.2024**

**சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் 2024-25ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச தொழிற் பயிற்சிக்கு பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை நேரடியாக சமர்ப்பித்து பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

சென்னை பள்ளிகளில் படித்த மாணவ மாணவியர்களின் எதிர்காலம் சிறக்க NCVT சான்றிதழ் உடன் கூடிய தொழிற் பயிற்சி கீழ்காணும் தொழிற் பாடப் பிரிவுகளில் அளிக்கப்படுகின்றது.

| வ. எண் | பயிற்சி வகுப்புகள் | பயிற்சி காலம் | சேர்க்கை எண்ணிக்கை | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (Computer) | 1 வருடம் | 48 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | குழாய் பொருத்துநர் (Plumber) | 1 வருடம் | 48 | 8ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 3 | பொருத்துநர் (Fitter) | 2 வருடம் | 20 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் (Motor Mechanic Vehicle) | 2 வருடம் | 24 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | மின்பணியாளர் (Electrician) | 2 வருடம் | 20 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 6. | எலக்ட்ரானிக் மெக்கானிக் (Electronic Mechanic) | 2 வருடம் | 24 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| **மொத்தம்** | | | **184** | |

சென்னை பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும் மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்து, மீதி காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் உள்ள பிற பள்ளிகளில் படித்த ஏழை, எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் விதிகளின்படி சேர்க்கை வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் சேர வயது வரம்பு 14 முதல் 40 வயது ஆகும். பெண்களுக்கு வயது வரம்பு கிடையாது.

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் சிறப்பு அம்சமானது முற்றிலும் இலவச பயிற்சி அளித்து ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்று தரப்படுகிறது. படிக்கும் போது தகுதியுடைய மாணவர்களுக்கு ஒரு மாதம் ரூ.10,500/- வரை சம்பளத்துடன் கூடிய பயிற்சி (Internship Training)

அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விலையில்லா நலத்திட்டங்களான இரண்டு செட் சீருடை, பஸ் பாஸ், பாடபுத்தகம் மற்றும் வரைபடக்கருவிகள், பாதுகாப்பு காலணி, இருசக்கர மிதிவண்டி, பயிற்சி நேர இடைவெளியில் காலை, மாலை இருவேளை தேநீர், பிஸ்கெட், மதிய உணவு மற்றும் பயிற்சி காலத்தில் மாதந்தோறும் ரூ.750/- பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

2024-25ஆம் கல்வி ஆண்டிற்கு தொழிற் பயிற்சியில் சேர விண்ணப்பப் படிவத்தினை சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் இலவசமாக பெறலாம் அல்லது இணையதள முகவரி www.chennaicorporation.gov.in மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணபத்தினை கீழ்காணும் முகவரியில் நேரடியாக சமர்ப்பித்து 01.06.2024 முதல் சேர்க்கையினை பெறலாம். சேர்க்கையின் கடைசி நாள் 31.08.2024 ஆகும்.

முகவரி:-

**சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம்,**

முத்தையா தெரு அருகில், லாயிட்ஸ் காலனி, ஐஸ் அவுஸ்,

இராயப்பேட்டை, சென்னை-14.

**தொலைபேசி எண் :** 044 – 2847 3117, 2951 5312, 70104 57571, 79049 35430

**(பேருந்து நிறுத்தம்:** ஐஸ் அவுஸ் காவல் நிலையம் அல்லது எல்லோ பேஜஸ். )

மேலும், மாணவர்கள் பயிற்சியில் சேரும்போது அசல் சான்றிதழ்களான பள்ளி மாற்றுச் சான்றிதழ், 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ் மற்றும் ஆதார் நகல் ஆகியவற்றின் வழங்க வேண்டும். குழாய் பொருத்துநர் (Plumber) பாடப்பிரிவுக்கு 8ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். நேரடி சேர்க்கையின் போது அரசு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்து பயிற்சியில் சேருவதற்கான அனுமதி வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**